அடையாள இலக்கம்

D ☐ ☐ ☐ ☐ ☐ ☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2017

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக**

1. புறாக்கூடு ____________________ + ____________________

2. நாளெல்லாம் ____________________ + ____________________

3. முத்தமிழ் ____________________ + ____________________

4. பதினொன்று ____________________ + ____________________

5. ஒருவருக்கொருவர் ____________________ + ____________________

(5 புள்ளிகள்)

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ச்சொற்களை எழுதுக.**

1. இம்மை - ______________________________

2. சுத்தம் - ______________________________

3. சண்டை - ______________________________

4. நண்பன் - ______________________________

5. வள்ளல் - ______________________________

(5 புள்ளிகள்)

**(இ) பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் பூர்த்தி செய்க.**

1) பல மாதங்கள் மழை பெய்யாததால் ஏரி குளங்கள் எல்லாம் ________________________ .

2) தாய் தன் குழந்தையைக் கண்ணை இமை காப்பது போலக் ________________________ வந்தாள்.

3) உடலிற் களைப்பு ஏற்படும்போது சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வது ________________________ .

4) மாணவர்கள் தீயபழக்கவழக்கங்களுக்கு ________________________ தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்.

5) இளமையில் கற்கும் கல்வி ________________________ ஆணி போன்று மனதில் பதிந்து நிற்கும்.

6) மணமக்களை உற்றார் உறவினர் அனைவரும் மனமார ________________________ .

7) நீதிபதி ________________________ ஆறுமாதம் சிறைத் தண்டணை வழங்கித் தீர்ப்பளித்தார்.

8) தற்கால ________________________ பள்ளிப்படிப்புடன் பலகலைகளையும் கற்கின்றனர்.

9) கம்பர் இயற்றிய ________________________ இலக்கிய நயம் மிகுந்த ஒரு நூலாகும்.

10) திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் 133 ________________________ உள்ளன.

(10 புள்ளிகள்)

## (ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.

1. குற்றம் செய்தவனுக்கு எதிராக **ஆதாரங்கள்** இல்லாததால் அவனுக்கு நீதிபதி தண்டனை வழங்கவில்லை.

   அ. பத்திரங்கள் ஆ. சான்றுகள் இ. உறுதுணை ஈ. சாட்சிகள்

2. தொல்காப்பியமே நமக்குக் கிட்டிய மிகத் **தொன்மை** வாய்ந்த இலக்கண நூலாகும்.

   அ. இனிமை ஆ. மேன்மை இ. அருமை ஈ. பழைமை

3. பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு **இயைந்த** வாழ்வு வாழ்ந்ததாக இலக்கியங்கள் இயம்புகின்றன.

   அ. வேறுபட்ட ஆ. முரண்பட்ட இ. ஒவ்வாத ஈ. ஒன்றிய

4. அந்த **ஆபத்தான** சூழ்நிலையில் வேறு ஒன்றும் செய்யத் தெரியாமல் குழம்பியிருந்தேன்.

   அ. நிர்பந்தமான ஆ. அபாயகரமான இ. துன்பமான ஈ. இன்பமான

5. பெரியோர் கூறும் அறிவுரைகளைச் **செவிமடுத்து** அதன்படி நடந்தால் நன்று.

   அ. சொல்லி ஆ. நடந்து இ. அணுகி ஈ. கேட்டு

6. மிகவும் ஆழமான **சமுத்திரத்தில்** மூழ்கி முத்தெடுப்பதில் பாண்டியநாட்டில் சிலர் வல்லவர்கள்.

   அ. ஆழியில் ஆ. ஆற்றில் இ. தடாகத்தில் ஈ. கிணற்றில்

7. துறவிகள் உலகத்துப் பொருள்கள் எவற்றின் மீதும் **பற்றுக்** கொண்டு இருக்கமாட்டார்கள்.

   அ. ஆர்வம் ஆ. ஆசை இ. ஈடுபாடு ஈ. அச்சம்

8. நாம் செய்யும் உதவிகளுக்குக் **கைம்மாறு** கருதுதல் மிகவும் தவறான ஒரு செயல் ஆகும்.

   அ. இலஞ்சம் ஆ. பிரதியுபகாரம் இ. பணம் ஈ. பரிசு

9. கண்ணனைப் போல் அதிவிவேகமுள்ள பிள்ளை இந்த **வையகத்தில்** வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என அவனது பெற்றோர் மகிழ்ந்தார்கள்.

   அ. நாட்டில் ஆ. புவியில் இ. நகரத்தில் ஈ. ஊரில்

10. பொருளாதார நெருக்கடியின் விளைவாகப் பலர் **அத்தியாவசியச்** செலவுகளைக்கூடக் குறைத்துக்கொண்டு வாழ்கின்றனர்.

    அ. ஆடம்பர ஆ. விழாக்கால இ. மிகவும் தேவையான ஈ. அதிக

(10 புள்ளிகள்)

(உ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.

குறிப்பு : ஆறு (6) சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைய வேண்டும்

1. **கூரை :** …………………………………………………………………………

……………………………………………………………………………………..

**கூறை** : ………………………………………………………………………….

……………………………………………………………………………………..

2. **தோள் :** …………………………………………………………………………

……………………………………………………………………………………..

**தோல் :** ……………………………………………………………………………

……………………………………………………………………………………..

3. **ஒலி** :…………………………………………………………………….. …

……………………………………………………………………………………..

**ஒளி** :……………………………………………………………………………

……………………………………………………………………………………..

4. **நீலம்** :……………………………………………………………………..…

……………………………………………………………………………………..

**நீளம்** :……………………………………………………………………..…

……………………………………………………………………………………..

5. **அலை** :…………………………………………………………………..

……………………………………………………………………………………..

**அழை** :…………………………………………………………………….

……………………………………………………………………………………..

(20 புள்ளிகள்)

## பகுதி 2

**(ஊ) பின்வரும் பத்திரிகைச் செய்தியைக் கருத்தூன்றிப் படித்து, அதன்பின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

கல்வி கற்றவர் சென்ற இடமெல்லாம் சிறப்படைவர். எல்லா நாடுகளும் கற்றவரை மதித்துப் போற்றி வரவேற்கும். கற்றவர்களுக்கு உலகமே சொந்தமாகும். அதனாலன்றோ திருவள்ளுவர், ஒருவன் தன் வாழ்வின் இறுதி நாள் வரை தொடர்ந்து கல்வி கற்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றார். கல்வி கற்க அறிவு வளரும் என்றும் அவர் எடுத்துரைக்கின்றார்.

பழங்காலத்தில் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமே கல்வி அடிப்படையாக இருந்தது. அது இன்று மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகின்றது. இன்றைய உலகத்தைக் கல்வி உலகம் என்றே சொல்லிவிடலாம். கல்வியில் இன்று மகத்தான மாற்றம் ஏற்பட்டுள்ளது. அறிவு வளர்ச்சியின் வேகம் என்றுமில்லாத அளவுக்கு இன்று வளர்ந்துள்ளது.

இன்று நாம் கற்கும் பல தொழில்நுட்பங்கள் இன்னமும் சில ஆண்டுகளில் பழையன ஆகிப் போய்விடும். ஏனெனில் கல்வியின் வளர்ச்சி அவ்வளவு துரிதமாக இருக்கிறது. எனவேதான் நம் கல்விக்கூடங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாகப் பாடங்கள் இன்று கற்பிக்கப்படுகின்றன.

கல்வி என்பது குழந்தைப் பருவத்தில் தொடங்கிப் பள்ளிப்படிப்புடன் அல்லது கல்லூரிப் படிப்புடன் முடிந்துவிடும் நிலை மாறிவிட்டது. இன்று கல்வி வாழ்நாள் முழுவதும் கற்கவேண்டிய ஒன்றாக ஆகிவிட்டது. எனவேதான் கற்று, மேல்நிலையில் உள்ள ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் போன்றோர் பல பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றித் தமது துறைசார்ந்த அறிவைப் புதுப்பித்தும் வளர்த்தும் வருகின்றனர். இவ்வாறு கல்வி என்பது பள்ளி அல்லது கல்லூரி என்ற இடங்களில் மட்டுமன்றி அலுவலகம், தொழிற்சாலை என எல்லா இடங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் தொடரப்படவேண்டிய ஒன்றாக இன்று மாறிவிட்டது. இப்போது கல்விக்கு வகுப்பறையின் வரம்பும், வயதின் வரம்பும் மறைந்துவிட்டன.

இயற்கை தரும் நிலவளம், நீர்வளம், கனிவளம் போன்ற செல்வங்கள் எத்தனையோ இருந்தாலும் கல்வியே ஒரு நாட்டின் முக்கிய வளமாக இன்று கருதப்படுகின்றது. கல்விவளம் இல்லாத நாடு மற்ற வளங்களைப் பெற்றிருந்தாலும் அவற்றை முழுமையாகவும், முறையாகவும் பயன்படுத்த முடியாது. ஆனால் கல்விவளம் உள்ள நாட்டில் மற்ற வளங்கள் குறைந்தாலும், செல்வவளத்தைக் கல்வி அறிவின் துணை கொண்டு உருவாக்கமுடியும். இதனை உலக நாடுகள் பலவற்றில் நாம் இன்று கண்கூடாகக் காணுகின்றோம். பழங்காலத்திற் செல்வம் படைத்த நாடுதான் கல்வி பெறமுடியும் என்ற நிலை இருந்தது. அது முற்றிலும் மாறிக் கல்வி பெற்ற நாடுதான் செல்வம் பெறும் நாடாக இருக்கமுடியும் என்ற நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலேதான் “சிந்திக்கும் பள்ளி கற்கும் நாடு” என்ற முழக்கத்தோடு நமது பள்ளிகளும், நாடும் முழுமுனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. திருவள்ளுவர் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தக் காரணம் என்ன? (5 புள்ளிகள்)

2. இக்காலக் கல்வி, பழங்காலக் கல்வியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (5 புள்ளிகள்)

3. மூன்றாவது பந்தியிலுள்ள "இன்று கல்விக்கு வகுப்பறையின் வரம்பும், வயதின் வரம்பும் மறைந்துவிட்டன." என்ற வாக்கியம் உணர்த்தும் உண்மை யாது? (5 புள்ளிகள்)

4. ஏன் கல்விவளம் இயற்கைவளத்தை விடச் சிறந்தது? (5 புள்ளிகள்)

5. வாழ்நாள் முழுவதும் ஒருவர் கல்வி கற்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றிய உமது சொந்தக் கருத்தை எழுதுக. (5 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**(எ) கீழே தரப்பட்ட எழுத்து வடிவங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து பதில் எழுதுக.** (25 புள்ளிகள்)

நாம் வாழும் நாட்டின் வரலாற்றைத் தெரிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இலங்கையில் வாழும் உறவினருக்கு அல்லது நண்பருக்கு அதற்கான காரணங்களை விபரித்து 200 சொற்களுக்குக் குறையாது ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

"நலமான வாழ்வு" வாழ நாம் மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் குறித்துச் சஞ்சிகை ஒன்றுக்கு 200 சொற்களுக்குக் குறையாது கட்டுரை ஒன்றை எழுதுக.

**விடைத்தாள் - எ)**

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………